**தலைப்பு 17 பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம்.**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்திற்குரிய வருடார்ந்த விவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்று தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்படுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மைன பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக்கணக்காய்வு அதிகாரச்சடத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகமானது வருடார்ந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள், மற்றும் பொறுப்புகள் தொடர்பான முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கப்பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கப்பூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னனியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்கணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாரான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்து கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கப்பூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகள் கட்டுபாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6 (ஈ) மற்றும் 38 பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.6 பந்தியின் பிரகாரம் படிவங்கள் மற்றும் குறிப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும் என்றாலும் 5 ஆம் குறிப்பில் பெறப்பட்ட முற்பணம் என காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,705,632 பெறுமதியான பணம் நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | பெறப்பட்ட முற் பணமாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,705,632 பெறுமதியான பணம் நிதி செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத வரவின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும் | இவ் அலுவலகம் ‘‘பீ’’ தரத்தின் திணைக்களமாக கணக்கு நடவடிக்கைகளை பேணி வருகிறப்படியால் முற்பண கணக்கின் வரவு திறைசேரியின் பிரதி செயலாளருக்கு காசோலை மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனால் அது வருமானமாக நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படமாட்டாது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 வருடத்தினுள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்கள் விற்பனையினால் பெறப்பட்ட மொத்த பணமான ரூபா 15,800 நிதி செயலாற்றல் கூற்றில் பிற பெறுவனவின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிற பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில், பிற வரவின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும். | இவ்வலுவலகம் (பீ) தரத்தின் திணைக்களமாக கணக்கு நடவடிக்கைகளை பேணி வருகிறபடியால் பெறுவனவு திறைசேரியின் பிரதி செயலாளருக்கு காசோலை மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனால் அது வருமானமாக நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படமாட்டாது. |
| (இ) 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் பிரதான லெஜர் செலவு காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. அத்தோடு மீள் ஒதுக்கீடு பெறுமதி ரூபா 450,000 இனால் அதிகரித்து மற்றும் மொத்த செலவு ரூபா 1,550,000 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது | சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கும் படிவத்தின் பிரகாரம் சீராக நிதிக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 267/2018 சுற்றறிக்கையின் 3.1 யின் படி திறைசேரியின் இறுதி நிதி கூற்றின் படி புள்ளிவிபரமாக உள்ளடக்கப்பட்டிருந்துடன் முற்பண கணக்கின் மதிப்பீடு நிதி செயலாற்றல் பாய்ச்சலுக்கு (ஏசீஏ.எப்) எதிர்வரும் வருடத்தில் உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|
| (அ) கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதிக்கு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த ஊழியரின் இடர்க் கடன் மீதி ரூபா 128,000 ஆக காணப்பட்டதுடன், அவ் நிலுவை மீதி 03 வருடங்கள் கடந்து இருப்பினும் அறவிட இயலாது காணப்பட்டது. | கடன் பணம் மீள் செலுத்தப்பட்டு முடிவதற்குள் ஓய்வு பெற்றால் அல்லது மரித்தால் அல்லது சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஊழியன் ஒருவன் மற்றும் அரச கூட்டுறவிற்கு விடுதலையாக்கப்பட்ட ஊழியர் ஒருவருடைய கடன் மீதி அறவிடப்படல் தொடர்பாக தாபன விதி கோவையின் XXIV பந்தியின் 4 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டினை பின்பற்ற வேண்டும். | வேலை நிறுத்தப்பட்டு காணப்படும் ஊழியர் ஒருவரிடமிருந்து பெறப்பட வேண்டிய இடர்க் கடன் பணம் அறவிடப்படுவது தொடர்பாக எஞ்சிய நடவடிக்கைகள் அரசாங்க தலைமைச்சட்ட அதிகாரிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) அரச நிதி திணைக்களத்தின் சொத்து அறிக்கை மற்றம் நிதி அல்லாத சொத்து பாய்ச்சல் அறிக்கையின் படி 2018 சனவரி 1 ஆம் திகதிக்கு மற்றும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மின் உபகரணங்களின் மீதி ரூபா 91,601 ஆக காணப்பட்ட போதிலும் சிகாஸ் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருந்த சொத்து பேரேட்டிற்கு அமைவாக அப்பெறுமதி ரூபா 121,600 ஆக காணப்பட்டமையால் மீதிகளுக்கு இடையிலான | அரச நிதி திணைக்களத்தின் சொத்து அறிக்கை மற்றும் நிதி அல்லாத சொத்துப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் சிகாஸ் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க, தயாரிக்கப்படுகின்ற சொத்து பேரேடான 3 பேரேடுகளுக்குரிய மிகுதிகள் சமமாக காணப்பட வேண்டும். | 2018 திசெம்பர் வரையிலும் அலுவலகம் சார்ந்த நிதி அல்லாத சொத்து பாய்ச்சல் அறிக்கை மற்றும் திரைசேரியின் அறிக்கை சமமாக காணப்பட்டது. எனினும் அரச நிதி திணைக்களத்தினால் கோரப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் அலுவலகத்துக்குரிய சொத்துப் பாய்ச்சல் அறிக்கை சிகாஸ் நிகழ்ச்சி நிரலின் மூலம் அரச நிதித் திணைக்களத்திற்கு பதிவேற்றம் செய்யப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாரினால் ரூபா 29,999 ஆன வித்தியாசம் காணப்பட்டது. இது தொடர்பாக அரச நிதி திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் |

| | | |
|---|---|---|
| வித்தியாசம் ரூபா 29,999 ஆக காணப்பட்டது. | | அது விரைவாக சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 1.6.3 முற்பண மீதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ல் உள்ளவாரான நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப் பட்டிருந்த மீள் பெறப்பட்ட வெளிநாட்டு பயணச் செலவு கணக்கிலிடப்படும் போது உருவாகிய வித்தியாசம் ரூபா 76,810 பெறுமதியான பணம் இணங்கக் கூடிய கணக்கின் மூலம் தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. | நிதி செயலாற்றல் கூற்றின் படி வரவு மற்றும் மொத்த செலவிற்கு இடையில் வித்தியாசம் ஏற்பட்டால் அவ்வித்தியாசம் இணங்கக் கூடிய கணக்கினுடாக தீர்க்கப்பட வேண்டும் | 17-1-1-1102 (பயணச்செலவு வெளிநாடு) செலவு விடயத்திற்கு வரவு வைப்பதற்கு 2018 பெப்ரவரி மாதம் 161106 இலக்கமுடைய மற்றும் 2018 ஜூலை மாதம் 161291 இலக்கமுடைய காசோலைகள் மூலம் திறைசேரியின் பிரதி செயலாளரிற்கு அனுப்பப்பட்ட ரூபா 76,810 பெறுமதியான பணம் திறைசேரியின் கணினி அச்சு குறிப்புகளில் சரியாக கணக்கில் இடப்பட்டிருந்த போதிலும் இவ் அலுவலகத்தில் சிகாஸ் நிகழ்ச்சி நிரலில் அது சரியாக காட்டப்படாமையால் அரச நிதி திணைக்களத்தின் ஆலோசனைக்கேற்ப இவ் அலுத்தில் 17-1-11102 (வெளிநாட்டு பயணம்) செலவு விடயத்துக்கு கூடுதல் கட்டணம் (SURCHARGE) செய்யப்பட்டது. அதன் பின்னர் திறைசேரியின் கணினி அச்சுக் குறிப்புக்களை பரீட்சிக்கும் போது மேற்கூறப்பட்ட குறிப்பு இருமுறை கணக்கிலிடப்பட்டு காணப்பட்டதால் மாற்று பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் இயக்க திணைக்களத்திற்கு முன் வைக்கப்பட்டுள்ளதுடன் அத் திணைக்களத்தினால் மீண்டும் தயாரிக்கப்பட்ட மாற்று பத்திரத்தின் ஊடாக தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் கணக்கிலிடப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் இவ் அலுவலகத்தின் செலவு |

| | | |
|---|---|---|
| | | தலைப்பு சரியாக இருப்பினும் முற் பண கணக்கிற்கு ரூபா 76,810 பெறுமதியான முற்பணம் பெறப்பட்டதாக குறிப்பிடப் பட்டிருந்தது. இருப்பினும் பணத்தில் முற்பணம் ஒன்று பெறப்படவில்லையென குறிப்பிடுகிறேன். |

### 1.6.4 ஆவணங்கள் புத்தகங்கள் முறையாக பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|
| **பெறப்பட்ட காசோலை, காசுக்கட்டளை போன்றவற்றிற்கான ஆவணங்கள்** | | |
| நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் பெறப்பட்ட காசோலை, காசுக்கட்டளை போன்றவற்றுக்கான ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டிருக்க இல்லை. | பெறப்பட்ட காசோலை, மற்றும் காசுக்கட்டளை குறிப்பிடப்படுவதற்கு இயலுமான வகையில் ஆவணம் ஒன்று பேணப்பட வேண்டும். | பெறப்பட்ட பணம், பெறப்பட்ட காசோலை, காசுக்கட்டளை போன்றவற்றிற்கான ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டு வருங்காலத்தில் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 1.6.5 சட்ட விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து |
|---|---|---|---|
| **சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையில் 6வது பந்தி, 2009 ஜுன் 17ஆந் திகதிய 09/2009/(i) இலக்கமுடைய பொது நிர்வாக | நிரந்தர கடமை காலத்திற்கு பின்னர் செலுத்தப்படுகின்ற கொடுப்பணவிற்காக காலத்தை அடிப்படையாக கருதுவது என்றால் அக் காலத்தை கைரேகை இயந்திரத்தின் மூலம் | சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் கைரேகை இயந்திரம் பயன்படுத்த வேண்டும் | கடமை காலத்தின் பின்னர் கூட்டங்கள் நடத்தப்பட்டால் கொடுப்பனவு மேற்கொள்வது பாராளுமன்ற கூட்டங்கள் முடிவபெறும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு எனவும், |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19ஆந் திகதிய 03/2017 இலக்கமுடைய சுற்றறிக்கை | உறுதிப்படுத்த வேண்டும். எனினும் அவ்வாறு உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 1,339,883 பெறுமதியான கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | பிற்பகல் 6.30 க்கு பின்பதாக வேலை செய்திருக்கும் ஊழியர்களுக்கு மட்டும் இக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடுகிறேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மூலதன செலவு விடயங்கள் 3 க்காக உயர் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் காரணமாக ஒதுக்க ஏற்பாடு பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சியது அச் செலவு விடயங்களுக்கு தொடர்புடைய நிகர ஒதுக்க ஏற்பாட்டில் நூற்றுக்கு 18 இல் இருந்து நூற்றுக்கு 99 சதவீதம் எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்கள் மிக பழமையானதாக இல்லாமையின் காரணத்தினால் பழுதுபார்த்தல் தேவை ஏற்படாததுடன் சீரற்ற காலநிலை காரணமாக பயிற்சிகள் நடத்துவதற்கு இயலாமையாகியது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையில் 3.5 (i) (இ) இன் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலைகளுக்கேற்ற குறிப்பு நிறைவேற்றப்பட்டு இருந்தால் ஒழிய எந்தவொரு அரசுக்கு சொந்தமான நிறுவனம் தானியக்கமாக நேரடி ஒப்பந்த முறைக்காக தகுதி பெறப்பட மாட்டாது. நேரடி ஒப்பந்த முறை பொருத்தமானதாக | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.5.1 (அ) இன் படி நேரடி ஒப்பந்த முறையை கருத்தில் கொண்டு தொடர்புபட்ட கொள்வனவு நடைபெற்றதுடன் எதிர்வரும் காலத்தில் உங்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் கருத்தில் கொண்டு தொடர்புபட்ட கொள்வனவு நடத்தப்படும் என குறிப்பிடுகின்றேன் |

காணப்படாத சந்தர்ப்பத்தில் அம்முறை பயன்படுத்தப்பட்டு இரு சந்தர்ப்பங்களில் அரசுக்கு சொந்தமான நிறுவனத்திலிருந்து ரூபா 92,844 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.